" மாண்புமிகு உறுப்பினர் திரு ரா. ராமச்சந்திரதுரை அவர்கள் மீதுள்ள உரிமைப் பிரச்சினையை இந்த அளவோடு எச்சரித்து விட்டு விடலாம்."

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்: தலைவரவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. கே. விநாயகம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விதியில் (20)-ல்

Sittings of the Assembly shall, unless the Speaker otherwise directs, ordinarily commence at 9·00 a.m. and conclude at 1·30 p.m.

என்று இருக்கிறது. முன்னுடியே ஸ்பீக்கர் அறிவித்து விட்டால் நல்லது, உணவு விடுதியில் இல்லாவிட்டால் சாப்பாடு கிடைக்காது. எத்தனை மணி நேரம் வரை நடக்கும் என்று அறிவித்து விட்டால் அதுவரைக்கும் சாப்பாடு வைத்து இருக்குமாறு உணவு விடுதிக்கு டெலிபோன் செய்து விட்டால்தான் சாப்பாடு கிடைக்கும்.

(4) அமைச்சரின் விளக்க உரை: இந்துக்கள் அல்லாதவரையும் கோவில்களில் நுழைய அனுமதிப்பது குறித்து முதலமைச்சரின் விளக்கவுரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 82-வது விதியின்கீழ் இந்த மன்றத்தில் கீழ்க்காணும் அறிக்கையை அளிக்கிறேன்:—

இந்துக்கள் அல்லாதவர்களையும், ஆலயங்களில் அனுமதிக்கும் வகையில், ஆலய நுழைவு விதிகளில் 3-வது விதியின் துணைவிதி (க)-யை நீக்கி அமைத்தது இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. இந்துக்கள் அல்லாதவர்கள் கோயிலுக்குள் செல்லுவது கோவில் அதிகாரிகளால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் என்பது முன்பே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இந்துக்கள் அல்லாதார் அனுமதிக்கப்படுவதால், கோயிலின் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று சிலர் அச்சப்பட்டதைத் தவிர்க்கும் வகையில் அரசு கீழ்க்கண்ட அறிவுரைகளை கோவில் நிர்வாக அதிகாரிகளுக்குப் பிறப்பிப்பது அவசியம் என்று கருதுகிறது.—

(அ) இந்துக்கள் அல்லாதவர்கள் பூஜை நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் மட்டுமே கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

(ஆ) மகா மண்டபம் வரையில், இந்துக்கள் அல்லாதவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். வழிபாட்டுக்குரிய அர்த்தமண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(இ) கோயிலுக்குள் செல்லுவதற்கான நோக்கத்தைக் காட்டி அதற்குரிய அனுமதிச் சீட்டைப் பெற்று, கோயில் வழிகாட்டியுடன் செல்ல வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றுச் செல்பவர்கள் கோயிலுக்கான பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

(ஈ) பொதுவாகவோ, சிறப்பாகவோ கோயிலின் தூய்மை, மரியாதை இவற்றைச் செல்லுபவர்கள் பேணிக் காப்பாற்ற வேண்டும்.

(உ) கோயிலின் எந்தப் பகுதியையும், தகுந்த அதிகாரியின் அனுமதியின்றி புகைப்படம் எடுக்கக் கூடாது.

இதற்குத் தகுந்தவாறு விதிகள் மாற்றியமைக்கப்படும் என்று அறிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் மசோதாக்கள். (5) தகவல் கோரல். வேப்பேரி பகுதியில் மாவோவின் படங்கள் விநியோகம் செய்யப்பட்டது குறித்து.

Thiru P. G. KARUTHIRUMAN: I want to put only one question since this is the last day.

நேற்று வேப்பேரிப் பகுதியிலே மாவோவின் போஸ்டர்கள் விநியோகிக்கப்பட்டதாகத் தகவல் வந்தது. நான் எனக்குத் தகவல் கிடைத்தவுடன் விஜிலன்ஸுக்குத் தெரிவித்தேன். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதைப்பற்றி வந்தவுடனே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்திலே கூறியிருப்பார்களானால் நான் விவரங்களைப் பெற்றிருப்பேன். மாவோவின் விளம்பரம் ஆங்காங்கு கொஞ்சம் முளைவிட்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால் கொஞ்சம் வளரவும் செய்கிறது. ஆனால் இந்த அரசு நிச்சயம் மிகுந்த கண்காணிப்போடு இருக்கும். இந்த மன்றத்திலே உள்ள எந்தக் கட்சிக்காரர்களும் அவர்களுக்கு உடன்பட்டவர்கள் அல்ல, நக்சல்பாரிகளுக்கு. இந்த மன்றத்திலே உள்ள எல்லாக் கட்சியினரும் அவர்கள் விஷயத்திலே மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களால் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் இருக்கிற ஆபத்தை உணர்ந்து வன்முறைச் செயல்கள் மூலம் நாட்டுக்குக் கேடு ஏற்பட்டுவிடாமல் இந்த விஷயத்தில் இந்த அரசோடும், அரசுக் காவல் துறையோடும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. தன்னிலை விளக்கம்: தன் சொத்து விவரக் கணக்கில் செய்ய வேண்டிய திருத்தம் குறித்து திரு.கே. விநாயகம் அவர்களின் தன்னிலை விளக்கம்.

Thiru K. VINAYAKAM : I rise on a point of personal explanation. I have submitted a statement of my assets and liabilities. There is a slight mistake. It has crept in there. I am now terribly afraid of this House. The Memebers are so vigilant. This is the way in which we should function and I am very proud of our Members including the Governing Body and those in Opposition. In page 3, I have described that I have raised a loan from Purasawalkam Fund to the extent of of Rs. 35,000 on a property of my wife. It is Rs. 35,000 that I asked when I submitted this assets and liabilities. But they granted only Rs. 30,000 and not Rs. 35,000. That may be corrected in my statement.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுடைய உறுப்பினருடைய நேர்மை எப்படியிருக்கிறது என்பதைக் கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன்: கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புகள் சொல்வதிலே ஆங்கிலத்திலே சொன்னார்கள். தமிழிலே இருந்தால் நல்லது. உரிமைக் குழுவிற்கு விடுவதைப்பற்றித் தீர்ப்புகள் கொடுக்கும்பொழுது ஆங்கிலத்தில் கொடுத்தார்கள். ஆங்கிலத்தில் சொல்வதால் கேட்பதற்கு நன்றாக இல்லை. எனவே தமிழிலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.